
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூன் 22,2023 • புரட்சி 23 • முழக்கம் 23 • விலை ரூ.3.00

## ஒடுக்கப்பட்டோரை வஞ்சிக்கும் ‘நீட்’

***2023 ஆம் ஆண்டிற்கான ‘நீட்’ தேர்வில், தேசிய அளவில் 50 இடங்களைப் பிடித்த மாணவர்களின் பின்னணி குறித்து ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளிதழ் ஆய்வு நடத்தியுள்ளது.***

*அவர்களில் 38 மாணவர்களின் பள்ளி, கல்வி வாரியம், ‘நீட்’ தேர்வுக்காக பெற்ற பயிற்சி உள்ளிட்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு உள்ளன. அந்த 38 மாணவர்களில் 29 பேர் சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தில் படித்தவர்கள்; 5 பேர் ஆந்திர மாநில பாடத் திட்டத்திலும், 3 பேர் மராட்டிய மாநிலப் பாடத் திட்டத்திலும், 2 பேர் மேற்குவங்க மாநிலப் பாடத் திட்டத்திலும் படித்தவர்கள். அதேபோல், விவரங்கள் சேகரிக்கப்பட்ட 38 பேரில், 29 பேர் பொதுப் பிரிவைச் சேர்ந்த உயர்ஜாதி மாணவர்கள். 7 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்புகளையும், இருவர் பட்டியலினத்தையும் சேர்ந்தவர்கள். சாதனை படைத்த மாணவர்கள் 38 பேரில் 37 பேர் ‘நீட்’ தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள். ஒருவர் மட்டுமே சிறப்புப் பயிற்சி பெறாதவர். ஆனால், அந்த மாணவர் டில்லியின் புகழ்பெற்ற பொதுப்பள்ளியில் படித்தவர். சாதித்ததாகக் கூறப்படும் அனைவருமே டில்லி, புனே, கொல்கத்தா, நாக்பூர், விஜயவாடா, விசாகப்பட்டினம், சென்னை போன்ற பெருநகரங்களைச் சேர்ந்தவர்கள். அனைவருமே பொருளாதார அடிப்படையில் வலிமையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.*

*‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளிதழ் மேற்கொண்ட இந்த ஆய்வுகளில் இருந்து, ‘நீட்’ தேர்வு என்பது நகர்ப்புறங்களைச் சேர்ந்த, தனியார் பயிற்சி மய்யங்களில் லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து படிக்கும் அளவுக்கு வசதி படைத்த குடும்பங்களின் மாணவர்களுக்கு மட்டுமே கிடைத்தது என்பது உறுதியாகி உள்ளது. மேலும் மருத்துவப் படிப்பை ‘நீட்’ தேர்வு ஏழைகளுக்கு எட்டாக்கனியாக்கி விட்டது.*

*மருத்துவக் கல்வி என்பது உயர்ஜாதியினர், பணக்காரர்கள், நகர்ப்புறத்தாருக்கு மட்டுமே உரிமையானது என்பது அம்பலமாகியுள்ளது. அரசு பள்ளிகளில் படித்தவர்கள் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.*

*நீட் தேர்வில் முதலிடம் பெற்ற இரண்டு மாணவர்கள் NCERT கல்வி மற்றும் பயிற்சிக்கான ஆய்வு கவுன்சில் என்ற ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பாட நூல்களை படித்தால் மட்டுமே தேர்ச்சி பெற முடியும் என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.*

## அமலாக்கத்துறை பாஜகவின் தொண்டர் படையா?

அமைச்சர் செந்தில் பாலாஜி அதிரடியாக கைது செய்யப்பட்டிருக்கிறார். தமிழ்நாடு அரசின் தலைமை செயலகத்தில் கூட்டாட்சி தத்துவத்தை சிதைக்கும் வகையில் அமலாக்கத்துறை நுழைந்து இருக்கிறது. இவைகளெல்லாம் எப்படி நடக்கிறது, எதற்காக நடக்கிறது என்பதை நாம் யோசித்து பார்க்க வேண்டும். செந்தில் பாலாஜி அதிமுகவிலோ, பாஜகவிலோ இருந்திருந்தால் அவர் மீது எந்த நடவடிக்கையும் பாய்ந்திருக்காது. அவர் திமுகவில் சேர்ந்து குறிப்பாக கோவை மண்டலத்தில் பாஜக ஆதிக்கத்தை தகர்த்துவிட்டார் என்ற ஒரே ஆத்திரத்தின் காரணமாக அவர் பழிவாங்கப்படுகிறார். செந்தில்பாலாஜி விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தருகிறேன் என்று கூறியும் அவரை அமைச்சர் என்ற நிலையில் இருந்தும் கூட நள்ளிரவில் அவரை ஏன் கைது செய்கிறார்கள்?

ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் போக்குவரத்து துறையில் வேலைவாங்கி தருவதாக கூறி செந்தில் பாலாஜி பணம் வாங்கினார் என்பது குற்றசாட்டு. ஊழல் நடந்தது ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில். எடப்பாடி பழனிசாமி இப்போது ஊழல் அமைச்சர் என்று கூறுவதன் மூலம் ஜெயலலிதாவையும் சேர்த்து அவமானப்படுத்துகிறார். அண்ணாமலை ஜெயலலிதாவை ஊழல் முதலமைச்சர் என்று கூறியதற்கு பொங்கி எழுந்த அ.இ.அ.தி.மு.க வினர் இப்போது அவர்களே ஜெயலலிதா ஆட்சியில் ஊழல் செய்த செந்தில் பாலாஜியைக் கைது செய்வதில் என்ன தவறு என்று என் சொல்லி தங்களது புரட்சித் தலைவி மீது சேற்றை வாரி வீசிக் கொண்டிருக்கிறார்கள்.

அமலாக்கத்துறை இதற்கான ஆவணங்களை சேகரிப்பதற்காகத்தான் தலைமைச் செயலகம் வந்ததாக கூறுகிறது. 2021 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜி மீதான இந்த வழக்கைத் தொடர வேண்டும் என்று கூறி அதற்கான முழு ஆவணங்களையும் ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்து இருக்கிறது. அதன் அடிப்படையில் தான் உச்ச நீதிமன்றமும் இந்த விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது. ஏற்கனவே ஆவணங்களை சேகரித்து வைத்ததற்கு பிறகு புதிதாக என்ன ஆவணங்களை சேகரிக்க போகிறார்கள்? இப்போது செந்தில் பாலாஜியிடம் கேட்டிருக்கிற கேள்விகள் எல்லாம் இப்போது யார் யாரிடம் தொடர்பு இருக்கிறது? என்று திமுக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு எதாவது பிரச்சனைகள் கிடைக்குமா என்பதை தோண்டி எடுப்பதற்காகத்தான் இந்த விசாரணையை இவர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள். இதுவரை பாஜக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ஒரு பாஜகவினர் வீட்டில் கூட அமலாக்கத்துறையோ வருமானவரித்துறையோ எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்ததில்லை. இதில் பச்சையாக ஒரு சார்பாக அரசு இயந்திரத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கான ஒரு உதாரணம்.

தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டில் சிபிஐ விசாரணை நடத்துவதற்கு தமிழக அரசின் முன் அனுமதி பெற்று தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது. இது ஏற்கனவே எடுத்திருக்க வேண்டிய ஒரு முடிவு, ஏற்கனவே பல மாநிலங்களில் இத்தகைய முடிவுகளை எடுத்திருக்கின்றனர். இப்போது எடுக்கப்பட்டிருக்கிற முடிவு சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவு.

ஊழல் வழக்கைப் பற்றி விசாரிப்பதற்கோ, தண்டனை வழங்குவதற்கோ யாரும் தடை போட முடியாது. அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு நெருக்கடிக்கு உள்ளாக்க முறைகேடாக பயன்படுத்தும் போது தான் கடுமையான எதிர்ப்புகள் எழுகின்றன. தமிழ்நாட்டில் அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, புலனாய்வுத்துறை, ஆளுநர், உள்துறை அமைச்சர் என்று பல அதிகார மையங்கள் பாஜக தொண்டர் படைகளாக களத்தில் இறக்கப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை செயல்பட விடாமல் முடக்குவதற்கு துடிக்கிறார்கள். மக்களைத் திரட்டி இந்த அடக்குமுறை சட்டங்களை, சர்வாதிகாரத்தை வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வீழ்த்துவது ஒன்றுதான் இதற்கு சரியான பாடமாக இருக்க முடியும்.

### உத்ரகாண்ட்டில் இஸ்லாமிய வெறுப்பரசியல்

இந்து கடவுளர்கள் வாழும் உத்ரகாண்ட் மாநிலத்தில் இஸ்லாமியர்கள் வாழக்கூடாது என்று சங்கிகள் இஸ்லாமியர்களை வன்முறையால் வெளியேற்றி வருகிறார்கள். அவர்கள் வீடுகளைப் பறிமுதல் செய்து வருகிறார்கள், புஷ்கர் சிங் தாமி முதல்வராக உள்ள இம்மாநிலத்தில் பாஜக ஆட்சி நடக்கிறது. விசுவ இந்து பரிஷத் என்ற இந்து அமைப்பும் ’தெய்வங்கள் வாழும் பூமி’ என்ற அமைப்பை நடத்தி வரும் தட்சண் பாரதி என்பவர் தலைமையிலான மத வெறியர்களும் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு இந்த இன வெறி ஆட்டத்தை நடத்தி வருகிறார்கள். பாஜக ஆட்சி அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் இந்த வெறிச்செயலை அனுமதித்துக் கொண்டு இருக்கிறது.

2019 - லேயே இந்த இன ஒதுக்கல் என்ற மத வெறுப்பு அரசியல் இங்கே தொடங்கிவிட்டது. ’இந்து தெய்வங்கள் வாழும் பூமி’ அமைப்பு உத்ரகாண்ட் மாநிலத்தில் இஸ்லாமியர்கள் வாழக் கூடாது, ரம்ஜான், கிறிஸ்துமஸ் பண்டிகைகளை கொண்டாடக் கூடாது என்று ஒன்றரை லட்சம் துண்டு பிரசுரங்களை அச்சடித்து பகிரங்கமாக விநியோகித்தது. மாநில ஆட்சி கண்துடைப்புக்காக தட்சண் பாரதியை கைது செய்து பிறகு விடுதலை செய்து விட்டது. அவர் இப்போது மீண்டும் வன்முறை வெறியாட்டத்தை தொடங்கி இருக்கிறார், இந்த மத வெறி பாசிஸ்ட்டுகள் தான் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று கூச்சல் போட்டு வருகிறார்கள்.

# இந்துத்துவா; குழப்பவாதிகளுக்கு ரொமிலா தாப்பர் பதிலடி



(இப்போது பேசப்படும் இந்துத்துவா அரசியல் குறித்து பிரபல வரலாற்று அறிஞர் ரொமிலா தாப்பர் இந்து ஆங்கில நாளேட்டிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜூன் 18 2023இல் பேட்டி ஒன்றை அளித்திருக்கிறார் புதிய சிந்தனை வெளிச்சங்களை தரும் அந்த பேட்டியில் சுருக்கமான தமிழ் வடிவம்)

• இந்துத்துவா பேசுவோர் வரலாற்றை அணுகும்முறை முற்றிலும் தவறானது என்கிறார் தாப்பர். வரலாற்றை அறிவதற்கு அது குறித்து ஆதாரங்களை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும், பிறகு அது குறித்த தெளிவான கோட்பாடுகளை உருவாக்குதல் ஆகியவை அடிப்படை. ஆனால் இப்போது பேசப்படும் இந்துத்துவாவுக்கு இந்த அணுகுமுறை ஏதும் இல்லை. கடந்த காலங்களில் நிகழ்ந்தவை, பேசப்பட்டவை என்ற கற்பனைகளை வரலாறுகளாக கட்டமைக்கிறார்கள். கடந்த கால கற்பனை புனைவுகளை நிகழ் காலத்துக்கான அடையாளம் என்கிறார்கள். எந்த முறையான ஆதாரங்களையோ ஆய்வுகளையோ இவர்கள் முன்வைப்பது இல்லை. இந்தியாவை இந்து ராஷ்டிரமாக மாற்றுவதற்கு இந்துக்களின் வரலாறுகளே ஏனைய மதங்களின் வரலாறுகளை விட மிகவும் பொருத்தமானது என்ற நோக்கத்தோடு செயல்படுகிறார்கள். இதற்காக வரலாற்றுப் பாடங்களையும் மாற்றி அமைக்கிறார்கள். பாடப் புத்தகத்திலிருந்து முகலாயர் வரலாறுகளை நீக்கி இருப்பதை இதற்கு உதாரணமாக கூற முடியும். கடந்த காலங்களில் சமூகத்திற்கான பங்களிப்பை இந்துக்கள் மட்டும் வழங்கிடவில்லை. ஆனால் இவர்கள் இந்துக்களுக்கு மட்டுமே உரிமை கொண்டாடுகிறார்கள். தற்போது நடக்கும் அரசியல் இந்துத்துவாவுக்கு சுமுகமான சூழலை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது. நவீன அறிவியல் சிந்தனைகள் அந்த காலத்திலேயே இந்துக்களிடம் இருந்தன என்று இவர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். விமானம் இருந்தது; பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை இருந்தது; ஸ்டெம் செல் குழந்தை பிறப்பும் இருந்தது என்று அடிப்படை ஆதாரங்கள் இல்லாமல் பேசி வருகிறார்கள்.

• இந்தியாவின் பூர்வீகக் குடிகள் ஆரியர்களே என்ற இந்துத்துவா வாதத்துக்கு ரொமிலா தாப்பர் பதில் அளித்தார். காலனி ஆட்சி காலத்திற்கு முன்பு ஆரிய மொழி பேசுகிறவர்கள் ஆரியர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்டனர். அவர்கள் சமூகத்தில் தங்களை மேலானவர்களாக நிலைநிறுத்திக் கொண்டனர். அரசர்கள் கூட சில நேரங்களில் தங்களை ஆரிய புத்திரர்கள் என்று அழைத்துக் கொண்டார்கள். பழங்கால ஈரான் கலாச்சாரத்தில் ஆட்சியாளர்கள் தங்களை ஆரியர்கள் என்று அடையாளப்படுத்தி பெருமை கொண்டாடினார்கள், ஈரானிய மத நூல்களில் ரிக் வேதம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டில் இனம் என்ற அடையாளம் முதன்மைப்படுத்தப்பட்டது. உலக மக்களை இனத்தின் அடிப்படையில் அடையாளம் காண தொடங்கினர் இனம் அடையாளமாக வந்த போது அதில் உயர்வு தாழ்வுகள் உருவாயின. ஆரியர்கள் உயர்வானவர்களாக முன் நிறுத்தப்பட்டனர் ஹிட்லரும் முசோலினியும் இந்த இனப்பெருமையையே பேசினார்கள். ஆர்எஸ்எஸ் இந்து இனப் பெருமையை முன் வைத்தது. தேசம் என்பது என்ன என்பதற்கு ஒரு வரையறை தந்தார் சாவர்க்கர். இந்துக்களின் தேசம் அதன் மூதாதையர் வழிவந்த 'பித்ரு பூமி' அங்கே தான் இந்து மதம் தோன்றியது அந்த புண்ணிய பூமியின் மைந்தர்களே இந்துக்கள் என்றார் சாவர்க்கர். இந்துத்துவா ஆரியர்களின் பூமியே இந்தியா என்று சொந்தம் கொண்டாடுவது இப்படித்தான்.

• தேசிய கலாச்சாரம் என்பது இந்து கலாச்சாரம் தான் என்று பேசுவோர் கூறித்து தாப்பர் விளக்கினார். இந்தியாவில் இரண்டு தேசியங்கள் முன்வைக்கப்பட்டன, 19வது நூற்றாண்டிலும் அனைத்து மதப் பிரிவினரையும் உள்ளடக்கிய இந்திய தேசிய இயக்கமாக உருவானது. ஒவ்வொரு குடிமகன், குடிமகளும் அவர்களின் மதம், மொழி, ஜாதிக் கடந்த இந்திய குடிமக்களாக அரவணைக்கும் தேசியமாக அது உருப்பெற்றது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து அனைவரையும் உள்ளடக்கிய ஒரு இந்தியாவை உருவாக்குவதே அதன் நோக்கம் . 1947இல் மாநிலங்களை உள்ளடக்கிய இந்தியா உருவானது. அது ஜனநாயகம் மதச்சார்பின்மையை பேசியது, அதே காலகட்டத்தில் மதத்தின் அடிப்படையில் இந்து தேசியம் என்ற கருத்தாக்கமும் முன்வைக்கப்பட்டது. 1920, முப்பதுகளிலேயே இந்த மதவாத தேசியம் உருப்பெற்றுவிட்டது. மதவாத தேசியவாதம் பிற மதங்களில் இருந்து தன்னை தனிமைப்படுத்திக் கொண்டு தனது மத அடையாளத்தை உயர்த்திப் பிடித்தது. தங்களின் பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்தவர்களின் நலனுக்காகவே தேசமும் மாநிலங்களும் செயல்பட வேண்டும் என்று இது கூறுகிறது. தேசிய அரசுகள் (Nation - States) என்பது ஜனநாயகம் மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு நேர் முரணானது மதவாத தேசியம், காலப்போக்கில் இது மாநில அடையாளங்களை சிதைத்து ஒற்றை தேசமாக மாறக்கூடிய ஆபத்துகள் இருக்கின்றன என்கிறார் ரொமிலா தப்பார்.

# சனாதனத்திற்கு எட்டு வாரம் கெடு!

சனாதனம் பற்றி எட்டு வாரங்களுக்குள் விளக்கம் தர வேண்டும் என்று தமிழ்நாடு ஆளுநர் ரவிக்கு சென்னை உயர்நீதிமன்றம் கிடுக்குப்பிடி போட்டு இருக்கிறது. அப்படி ஒரு வளையத்துக்குள் ஆளுநரை சிக்க வைத்தவர் த.பெ.தி.க துணைத் தலைவர், மூத்த பெரியாரியலாளர் நமது வழக்கறிஞர் துரைசாமி.

ஆளுநர் அதற்கு என்ன பதில் சொல்வார், 'நீதிபதி அவர்களே! சனாதனத்திற்கு காலவரையறைகளே கிடையாது என்று எங்கள் ஆர். எஸ்.எஸ் தலைவர் கோல்வாக்கர் கூறிவிட்டார், அதைத்தான் நானும் கூறினேன். காலத்தால் வரையறுக்க முடியாத சனாதனத்துக்கு எட்டு வாரங்கள் கெடு விதிக்கலாமா? 'பிராமணியம் கூறுவதைத் தான் நான் பேசுகிறேன். என்னை மட்டும் ஏன் குறி வைத்து தாக்குகிறீர்கள்? இது நியாயமா? சனாதன தர்மமா? என்று பதில் கூறுவாரா? நமக்கு தெரியாது.

ஆனாலும் எங்கள் துரைசாமி சார் அப்போதும் விடமாட்டார் அடுத்து ஒரு தகவலை அதிரடியாக கேட்பார் 'உலகம் தோன்றிய போது சனாதனம் தோன்றி விட்டது என்று கோல்வக்கர் கூறுவதை நீங்கள் ஏற்கிறீர்களா? பெரும் வெடிப்பில் எரிமலைகள் மோதி நெருப்பைக் கக்க உலகம் தோன்றியது என்று அறிவியல் கூறுகிறது. எரிமலை வெடித்துக் கொண்டிருக்கும் போதே 'பிராமணன் தான் உயர்ந்தவன்; பிராமணனை மட்டும் வணங்கு என்று எரிமலை ஓங்கார கூச்சலிட்டதா? சனாதனத்துக்கு ஜே; பாரத மாதாவுக்கு ஜே என்று அலறியதா? பதில் கூறுங்கள்' என்று அடுத்த தகவலுக்கு நோட்டீஸ் அனுப்புவார்.

"அய்யா நான் ஓய்வு பெற்ற சாதாரண ஐபிஎஸ் அதிகாரி அமித்ஷா, மோடி தரும் அதிகாரத்தால் அவர்களை மலை போல நம்பி வரம்பு மீறி பேசிவருகிறேன், என்னை நாகலாந்து மக்கள் விரட்டி அடித்தது போல் தமிழ்நாட்டில் இருந்தும் ஓட வைத்து விடாதீர்கள். நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு எனது 'கதி மோட்சம்', 'எனக்கே தெரியாது" என்று ஆளுநர் பதிலளிப்பாரா? அதுவும் நமக்கு தெரியாது.

சனாதனம் என்றால் வர்ணாசிரமம் அதாவது பிராமணனே உயர்ந்தவன் என்று கூறுகிறார் வேத மரபின் அத்தாரிட்டி காஞ்சி சங்கராச்சாரி.

"ஆரியர்களே இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள். அவர்களுக்கான தர்மமே சனாதனம்", இது ஆர்.எஸ்.எஸ் கோல்வாக்கர் தரும் விளக்கம்.

"என்றென்றும் மாற்றவே முடியாது நிலையானது அதுவே சனாதனம்" இது வேத பண்டிதர்கள் தரும் வியாக்கியானம். ஆளுநரே இதில் நீங்கள் பேசும் சனாதானம் எது?" என்று வழக்கறிஞர் அடுத்த நோட்டீஸை அனுப்புவார்.


"ஆளை விடுங்கய்யா; இப்படி எல்லாம் புரட்டி எடுக்காதீர்கள் பிறகு நான் மோடி அமித்ஷாவிடம் போய் தகவல் அறியும் உரிமை சட்டத்திலிருந்து எனக்கு விதிவிலக்கு தரக் கோரி சட்ட திருத்தம் கொண்டு வந்துவிடுவேன்." என்று மிரட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

"தாராளமாக செய்யுங்கள் அதனால் என்ன? அதை எதிர்த்து நீதிமன்றம் போவோமில்ல என்பார் எங்கள் வழக்கறிஞர் துரைசாமி.

"நீங்கள் போகக்கூடிய ஆட்கள் தான் பெரியார் தொண்டர்களல்லவா? தமிழ்நாட்டில் சனாதனம் பேசினால் எவ்வளவு சிக்கி சீரழிய வேண்டும் என்ற உண்மை இப்போதுதான் புரிகிறது. ஏதோ உ.பி, பீகார் மாநிலங்களைப் போல் தமிழ்நாட்டையும் நினைத்து இப்படி எல்லாம் பேசி விட்டேன்" என்று அப்போதுதான் இவரது மண்டையில் உறைக்கும். ஆமாம் இந்த தமிழ்நாட்டில் சனாதனத்திற்கு எதிராக சமூகப் போராட்டமும் நடக்கும், சட்டப் போராட்டங்களும் நடக்கும், பெரியார் படையின் 'துரைசாமிகள்' சட்ட புத்தகங்கள் என்ற வாளை ஏந்தி களத்தில் தயாராக நிற்பார்கள்! நிற்கிறார்கள்!

கோடங்குடி மாரிமுத்து

## விஷ்ணுவும் சிவனும் எங்கிருந்து வந்தவர்கள்



இராட்சதர்கள் தபசு செய்தார்கள்; வரம் பெற்றார்கள்; அந்த வரத்தைக் கொண்டு அக்கிரமம் செய்தார்கள் - என்பதெல்லாம் இந்நாட்டுப் பழங்குடி மக்களையும், அவர்கள் தலைவர்களையும் இராட்சதர்கள் என்று சொல்லிக் கொல்லுவதற்குக் கடவுள்களும், தேவர்களும் என்ற பெயர்க்கொண்ட ஆரியர்கள் வழிதேடிக் கொண்ட ஒரு சாக்கே அல்லாமல் அவர்களது வரம் எதுவும் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் யாவர்? எப்போது உண்டானார்கள்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? - என்பதற்கு ஒரு ஆதாரமும் கிடையாது.

பெரியார், குடிஅரசு - 20.10.1947

# கலைஞர் முதல்வராக விரும்பிய பெரியார்



18. 1952-இல் மீண்டும் இந்தி எதிர்ப்பு போராட்டம் தீவிரமடைந்தது. திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒருவருக்கொருவர் கடும் வார்த்தைப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், இந்தித் திணிப்புக்கு எதிராக ஒரே பாணியில் போராட்டம் நடத்தினர். திருச்சி ரயில் நிலையத்தில் பெரியாரும் கலைஞரும் ஒன்றாக நின்று இந்தி எழுத்துக்களை கறுப்பு மை பூசி அழித்தனர்.

19. 1952-இல் கலைஞர் கதை, வசனம் எழுதி வெளியான பராசக்தி திரைப்படம் வெளியாகி பெரும் வெற்றி அடைந்தது. சிவாஜி கணேசன் நடித்த முதல் திரைப்படம் அதுதான். கிட்டத்தட்ட 72 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் இன்றளவிலும் பராசக்தி திரைப்படத்தின் வசனங்கள் பேசப்படுகின்றன.

20. 1953-இல் திமுக நடத்திய மும்முனைப் போராட்டம் கலைஞரின் அரசியல் வாழ்வில் மிக முக்கியமானது. ராஜாஜியின் குலக்கல்வி திட்ட எதிர்ப்பு, தமிழர்கள் பற்றிய நேருவின் கருத்துக்கு எதிர்ப்பு, டால்மியாபுரம் ரயில் நிலையத்தை கல்லக்குடி என பெயர் மாற்றுவது இப்போராட்டத்தின் நோக்கம். ‘கல்லக்குடி கொண்ட கருணாநிதி’ என நாகூர் ஹனிபா குரலில் இப்போதும் எதிரொலித்துக்கொண்டே இருக்கிறது அந்த வரலாறு.

21. திரைப்படங்கள் மூலம் கிடைத்த வருவாயில் 1953-இல் சரபேஸ்வரர் என்பவரிடம் இருந்து கோபாலபுரம் வீட்டை வாங்கினார் கலைஞர். மார்ச் மாதமே இந்த வீட்டை கலைஞர் வாங்கிவிட்டாலும், ஜூன் மாதத்தில் சரபேஸ்வரரின் பேத்தி திருமணத்தை அதே வீட்டில் நடத்திக்கொள்ள அனுமதித்தார். கடைசிவரை அந்த வீட்டில்தான் இருந்தார். அவரது மனைவி தயாளு அம்மாள் இப்போதும் அந்த வீட்டில்தான் இருக்கிறார்.

22. 1954-இல் பரமக்குடியில் ஒரு கூட்டத்தை முடித்துவிட்டு, பின்னிரவில் அங்கிருந்து காரில் திருச்சி புறப்பட்டார் கலைஞர். ஓட்டுநர் சாலை வளைவை கவனிக்காமல் மைல்கல் மீது மோதிவிட்டார். அந்த விபத்தில் கலைஞரின் வலது கண் பாதிக்கப்பட்டது. பல மாதங்கள் வலியால் துடித்து, பல அறுவை சிகிச்சைகள் செய்ய நேர்ந்தது. அதற்குப் பிறகுதான் கருப்பு கண்ணாடி அணிய ஆரம்பித்தார்.

23. 1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில்தான் முதன்முதலாக திமுக போட்டியிட்டது. கலைஞர் குளித்தலை தொகுதியில் போட்டியிட்டார். அண்ணா, அன்பழகன், கலைஞர் உட்பட 15 பேர் மட்டுமே முதல் தேர்தலில் வெற்றி பெற்றனர். அப்போது இருந்து மறையும் வரை போட்டியிட்ட எல்லா தேர்தல்களிலும் வெற்றியை மட்டுமே பெற்றவர் கலைஞர்.

24. அடுத்து நடைபெற்ற மெட்ராஸ் மாநகராட்சி தேர்தலில் காங்கிரஸைத் தோற்கடித்து தி.மு.க. வெற்றி பெற்றது. மெட்ராஸ் மாநகராட்சியின் தேர்தல் பொறுப்பை ஏற்று நுட்பமாக செயல்பட்டு வெற்றியைத் தேடிக் கொடுத்ததற்காக கலைஞருக்கு தங்க மோதிரம் அணிவித்து வாழ்த்தினார் அண்ணா.

25. 1962 தேர்தலில் திமுக 50 உறுப்பினர்களுடன் பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்தது. அண்ணா அந்தத் தேர்தலில் தோல்வியுற்று, பின்னர் மாநிலங்களவை உறுப்பினரானார். நெடுஞ்செழியன் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும், கலைஞர் துணைத் தலைவராகவும் அமர்ந்தனர்.

26. பொருளாதார இன்னல்களை நீக்க இயலாத மத்திய, மாநில அரசுகளை கண்டித்து தி.மு.க. எல்லா மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அண்ணாவும், கலைஞரும் 3 மாதங்கள் முதல் 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை பெற்றார்கள். 2 நாட்கள் முன்பே அண்ணா விடுதலையானார். கலைஞரை சிறையில் இருந்து அவரே நேரடியாகச் சென்று வரவேற்றார். கலைஞரை பெரிய பதவியில் அமர்த்த அண்ணா தயாராகிவிட்டார் என்பதை அச்சம்பவம் உணர்த்தியது. தி.மு.க.வின் பொருளாளராக உயர்ந்தார் கலைஞர்.

27. திமுகவின் பொருளாளராக இருந்த கலைஞர் பெரும் முயற்சி எடுத்து நிதி திரட்டி சென்னை அண்ணா சாலையில் கட்சிக்காக ஒரு அலுவலகத்தை கட்டினார். ராயபுரத்தில் இருந்து திமுகவின் தலைமையகம் அண்ணாசாலைக்கு மாறியது. அதுதான் இன்றைய அன்பகம்.

28. இந்தியில்தான் கடிதப் பரிமாற்றம் இருக்க வேண்டுமென்ற இந்திரா காந்தி அரசின் முடிவுக்கு எதிராக 1967-ல் மீண்டும் இந்தி எதிர்ப்பு போராட்டம் வெடித்தது. 3800 மாணவர்கள் உட்பட 7,000 பேர் கைது செய்யப்பட்டனர். டி.ஐ.ஆர் என்ற அடக்குமுறைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு கலைஞர் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார்.

29. 1967 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள 10 லட்சம் ரூபாய் நிதி திரட்ட திமுக முடிவெடுத்தது. அதற்கு திமுகவின் முப்பெரும் விழாவை சாதகமாகப் பயன்படுத்தி காகிதப்பூ என்ற நாடகத்தை எழுதினார் கலைஞர். மாநிலம் முழுவதும் நடந்த அந்த நாடகத்தில் கூடுதலாக 1 லட்சம் ரூபாய் சேர்த்து 11 லட்சம் ரூபாயாக வசூலானது. கேட்டதை விட கூடுதல் நிதியைக் கொடுத்ததால் அண்ணாவும் பெரிதும் பாராட்டினார்.

30. 1967 சட்டமன்றத் தேர்தலில் திமுக முதன்முறையாக வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. ஆளுநரை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரிய கையோடு பெரியாரை சந்திக்க திருச்சி புறப்பட்டார் அண்ணா. அப்போது நெடுஞ்செழியன், அன்பில் தர்மலிங்கம் ஆகியோருடன் கலைஞரும் உடனிருந்தார். தனது அமைச்சரவையை பெரியாருக்கும் அவரின் புரட்சிகர சிந்தனைகளுக்கும் அர்ப்பணிக்கிறேன் என்றார் அண்ணா.

31. திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து வந்த பின்னர் திமுகவினரும், திகவினரும் எலியும் பூனையுமாக சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். தேர்தலில் கூட பெரியார் காமராசரைத் தான் ஆதரித்தார். ஆனால் வெற்றி பெற்ற கையோடு அண்ணா பெரியாரை சந்திக்கச் சென்றதால் மிகப்பெரிய உணர்வலைகளை ஏற்படுத்தியது. அந்த வரலாற்றை கலைஞர் பலமுறை நினைவுகூர்ந்திருக்கிறார். ஒருமுறை கூட உணர்ச்சிவயப்படாமல் அதனை சாதாரணமாக சொல்ல முடிந்ததே இல்லை.

32. ‘எனக்கு காமராசர் மீது மதிப்பு உண்டு, ஆனால் காங்கிரஸில் உள்ள மற்றவர்களுக்கு அது பொருந்தாது. ஆனால் திமுகவில் உள்ள எனது சகோதரர்கள் அனைவர் மீதும் எனக்கு மதிப்புண்டு’ என பெரியார் அப்போது அறிக்கை ஒன்றை வெளியிட, திமுகவிற்கும் திகவிற்கும் இடையில் நீடித்த 18 ஆண்டுகால மனஸ்தாபங்கள் முடிவுக்கு வந்தன.

33. முதல் அமைச்சரவையிலேயே பொதுப்பணித்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார் கலைஞர். அண்ணா, நெடுஞ்செழியனுக்கு அடுத்து 3-வது இடத்தில் அவர் இருந்தார்.

34. திமுக ஆட்சியமைத்த அடுத்த ஆண்டே அண்ணா புற்றுநோயால் பாதிக்கப்பட, கட்சியும் ஆட்சியும் நிலைகுலைந்தன. இரண்டையும் தாங்கிப் பிடிக்க வேண்டிய இடத்தில் நெடுஞ்செழியனை விட கலைஞரின் பங்களிப்புகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன.

35. பட்ட கையிலேயே படும் என்பதைப் போல அண்ணா உடல்நலம் குன்றியிருந்த வேளையில், 1968 டிசம்பர் 25-ம் தேதி கீழ்வெண்மணியில் 44 தலித்துகள் குடிசையோடு வைத்து கொளுத்தப்பட்ட கொடூரம் நடந்தது. வரலாற்றில் கரும்புள்ளியாக மாறிப்போன அச்சம்பவம் அன்றைய திமுக அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. அன்றைய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சத்தியவாணி முத்துவை அழைத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றார் கலைஞர்.

36. 1969 பிப்ரவரி 3-ல் அண்ணா மறைந்தார். அரசமைப்பு விதிகளின்படி அன்றைய இரவே நெடுஞ்செழியன் இடைக்கால முதல்வராக்கப்பட்டார். அண்ணாவின் உடலை எரியூட்ட வேண்டுமென குடும்பத்தினர் முடிவு செய்தனர். ஆனால் அண்ணாவுக்கு ஒரு மதிப்புமிக்க நினைவிடத்தை அமைக்க வேண்டுமென குடும்பத்தினர், திமுகவினரை சம்மதிக்க வைத்து மெரினா கடற்கரையை தேர்ந்தெடுத்தார் கலைஞர்.

37. அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்த அகில இந்திய வானொலியில் 15 நிமிட கவிதை ஒன்றை வாசித்தார் கலைஞர். எதையும் தாங்கும் அண்ணாவின் இதயத்தை இரவலாகக் கேட்டு கவிதையை நிறைவு செய்தார். அந்த இரங்கற்பா இன்றளவிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

38. அண்ணா மறைவை அடுத்து கட்சிக்கும் ஆட்சிக்கும் நிரந்தர தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் திமுகவுக்கு ஏற்பட்டது. அந்த இடத்தைப் பிடிக்க நெடுஞ்செழியன் விரும்பினார். ஆனால் “கட்சிக்கு முடிவெடுக்கும் ஆற்றல் பெற்ற தலைவர் தேவை, இந்தச் சூழலில் கலைஞரை விட உறுதியோடு செயலாற்றக் கூடியவர் இல்லை” என்று கூறினார் பெரியார்.ஒடுக்கப்பட்ட சமூக பின்னணியில் இருந்துவந்த கலைஞர் - முதல்வராவது தனது கொள்கைக்கு கிடைத்த வெற்றி என்று பெருமைப்பட்டார் பெரியார். கலைஞருக்கு தனது சொந்த செலவில் சிலை வைக்க முன்வந்தார் பெரியார்.

39. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ஆதரவு எண்ணிக்கை தனக்கு சாதகமாக இல்லை என்பதை உணர்ந்த நெடுஞ்செழியன் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். கலைஞர் கட்சிக்கும் ஆட்சிக்கும் தலைவரானார்.

தொடரும்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கோயில் நுழைவு உரிமை கோரி கழகம் முற்றுகைப் போராட்டம்

*ஜாதி - தீண்டாமை - வன்கொடுமைக்கு எதிராக உரிய நடவடியை எடுக்காத மாவட்ட நிர்வாகத்தை கண்டித்து விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முற்றுகைப் போராட்டம் 15-06-2023 அன்று மாலை 3 மணியளவில் நடைபெற்றது.*

*முற்றுகை போராட்டம் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் தலைமையில் நடைபெற்றது.*

*விழுப்புரம் மாவட்ட தலைவர் இளையரசன், செயலாளர் பெரியார் சாக்ரட்டீஸ், கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் இராமர், கடலூர் மாவட்டத் தலைவர் மதன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*போராட்டத்தில் கள்ளக்குறிச்சி மாவட்ட கழகத் தலைவர் மதியழகன், கடலூர் மாவட்ட கழகச் செயலாளர் சிவக்குமார், கள்ளக்குறிச்சி மாவட்ட கழக அமைப்பாளர் சாமிதுரை, கடலூர் மாவட்ட கழக அமைப்பாளர் சதீஷ், விடுதலை இசைக் குழு கார்த்தி, தமிழக வாழ்வுரிமை கட்சி பரப்புரை செயலாளர் விஜி, பகுத்தறிவு, தலித் பாதுகாப்பு இயக்கம் பிரகாஷ், ராஜா மற்றும் தோழர்கள் மருதூர் மதிவாணன், பாலாஜி, வீரபாண்டி மற்றும் ஆத்தூர் திவிக மாவட்டப் பொறுப்பாளர் மகேந்திரன் உட்பட விழுப்புரம் கள்ளகுறிச்சி கடலூர் மாவட்ட கழகத் தோழர்கள் 50க்கும் மேற்ப்பட்டவர்கள் கலந்துகொண்டனர். பின்னர் அனைவரும் கைதாகி மாலை 7.30 மணியளவில் விடுவிக்கப்பட்டனர். தோழர்கள் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் தங்க வைத்த தோழர்களை விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினரின் தனி செயலாளர் மருதம் இரவி கார்த்திகேயன் நேரில் வந்து தோழர்களை வாழ்த்தினார்.*

*ஆசிரியர் சுண்டு விரல் இராமமூர்த்தி போராட்டத்தில் பங்கேற்ற தோழர்களை பெரியார் முன்னெடுத்த ஜாதி ஒழிப்பு போராட்டத்தை குறிப்பிட்டு பேசியதோடு விழுப்புரத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய இந்த போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளது என்று தோழர்களை வாழ்த்தி பேசினார்.*

## தீண்டாமை கிராமங்கள் : பட்டியல் தயாரிப்பு - கழகத் தோழர்கள் களமிறங்கினர்

***17.06.2023 சனி மாலை 5.00 மணியளவில் சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட தலைவர் சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது.***

**கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :**

*1) 17.05.2023-ல் இயற்கை எய்திய குமரன் நகர் கிளைக் கழக செயலாளர் பொன்.செல்வம் அவர்களுக்கு சேலம் மாவட்ட கழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும்,புகழ் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.*

*2) தீண்டாமை நிலவுகின்ற கிராம பகுதிகளில் இரட்டை சுடுகாடு, தேனீர் கடைகளில் இரட்டைக் குவளை, பொது கோயில்களில் பட்டியலின மக்கள் வழிபடுவதை தடுக்கும் இடங்களை கணக்கிட்டு வருகின்ற 25.06.2023ம் தேதிக்குள் மாவட்ட கழகத்திற்கு பட்டியலை ஒப்படைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.*

*3) எது திராவிடம்! எது சனாதனம்! எனும் தலைப்பில் தெருமுனைக் கூட்டங்களை அனைத்து கிராம பகுதிகளிலும் நடத்துவதெனவும், தெரு முனைக் கூட்டங்கள் நடத்தும் பகுதிகளின் பெயர்களை மாவட்ட கழகத்திற்கு 25.06.2023ம் தேதி ஒப்படைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.*

*கலந்துரையாடல் கூட்டத்தில் நகர, ஒன்றிய, கிளைக் கழக பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதைப் பற்றி தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.*

*கலந்துரையாடல் கூட்டத்தில் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன், மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் சம்பத் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். திவாகர் நன்றி கூறினார்.*

**நங்கவள்ளி, மடத்துக்குளம் செய்திகள் – அடுத்த இதழில்**

## மணிப்பூர் கலவரத்தைக் கண்டித்து சென்னையில் ரயில் மறியல்

சென்னை : மணிப்பூரில் நடைப்பெற்ற இனப்படுகொலையை தடுக்கத் தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்தும். கிருஸ்துவர்கள் - பழங்குடியினர் மீதான வன்முறையை நிறுத்தக் கோரியும்.

மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் ரயில் மறியல் போராட்டம் சென்னை எழும்பூரில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெற்றது.

போராட்டத்தில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## ஆளுநருக்கு கண்டனம்

சென்னை : தமிழ்நாட்டு மாணவர்களுக்கு பட்டமளிக்கும் கடமையைச் செய்யாமல் தவிர்த்தல் மற்றும் மாநில அரசுக்கு எதிரான ஆளுநரின் போக்கை கண்டித்தும், மருத்துவ கலந்தாய்வு நடத்தும் உரிமையை மாநில அரசிடமிருந்து பறிக்கும் ஒன்றிய அரசை கண்டித்தும்,

மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தமிழ்நாடு, சார்பில் ஜீன் 16, காலை 9 மணியளவில், ஆளுநர் மாளிகை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் இரண்யா கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். உடன் சென்னை மாவட்டக் கழக செயலாளர் இரா.உமாபதி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : June 22 , 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran